**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.68/2025**

**PW - 3**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.தமிழ்செல்வி ( LW.7 ) |
| Father's / Husband Name | : | த/பெ.தங்கராஜ் |
| Village | : | நாச்சியாபுதூர் |
| Taluk | : | தொட்டியம் |
| Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:-**

1) நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.05.2023 ம் தேதி மாலை 16.45 மணியளவில் நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது முன்னதாக மாண்புமிகு நாமக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற Crl.M.P.No.502/2022 Dt;05.07.2022உத்தரவுபடியும், நாமக்கல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் C.No.H2/202/DCB / NKL / 2022 Dt: 18.07.2022 மூலம் இவ்வழக்கின் வாதியான பாலு என்பவர் கொடுத்த புகாரின் பேரில் கடந்த 29.07.2022 ம் தேதி மாவட்ட குற்றப்பிரிவில் மனு இரசீது எண்.6/2022 வழங்கப்பட்டு பரிசீலனையில் உள்ளதை நான் பார்வையிட்டு பரிசீலித்து ஆஜர் எதிரி மீது நிலையக்குற்ற எண். 3/2023 சட்டப்பிரிவுகள் 406, 420 இதச வின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2) பின்னர் இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை உரிய வழிமுறையின் படி சம்மன் அனுப்பி கடந்த 15.05.2023 ம் தேதி வரவழைத்து விசாரித்தேன். பின்னர் கு.வி.மு.ச பிரிவு 41 A ன் கீழ் அவரை அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான பாலு, வரதராஜன், பழனிசாமி ஆகியோரை 10.12.2024 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு சம்மந்தமான ஆவணங்களை பெற்றேன்.

3) பின்னர் 16.10.2024 ம் தேதி பஞ்சாப் நேசனல் வங்கி மேலளார் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி மேலாளருக்கு எதிரி மற்றும் வாதியின் வங்கியின் பரிவர்த்தனை கேட்டு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பின்னர் 30.12.2024 ம் தேதி மேற்படிமேலாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆவணங்களை பெற்றேன். அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது இதச பிரிவு 406, 420 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், வாதி நிறுவனமான ஸ்ரீ காயத்திரி பைனான்ஸின் பதிவு சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

இவ்வழக்கு பிரச்சனையானது சிவில் சம்மந்தமான பிரச்சனை என்றும், குற்ற வழக்கு பதிவு செய்திருக்க இயலாது என்றும், பொய் புகாரின்பேரில் சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**